HHR17-1-4-TA

# இயேசுவின் கடைசி வார்த்தைகள்: வெளிப்படுத்துதல் புத்தகம் - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு, கிறிஸ்தவர்களின் பெரும்பாலானோர் தங்களுடைய வாழ்நாளில் இயேசு கிறிஸ்து திரும்பவும் பூமிக்கு வந்திடுவார் என விசுவாசிக்கிறார்கள். வெளிப்படுத்தின விசேஷமானது எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை கிறிஸ்தவ சபைகளுக்கு இயேசு கிறிஸ்துவால் கூறப்பட்ட இறுதி வார்த்தைகளாகும். உபத்திரவ காலத்தின் போது பூமியின் மீது வர இருக்கும் கடுமையான நிகழ்வுகளை குறித்து எச்சரிக்கிறார், சாத்தானுக்கு என்ன நடக்கும், அந்திகிறிஸ்துவுக்கு என்னவாகும், கள்ள மார்கத்தை யார் பின்பற்றுவார்கள் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல அர்மகெதான் யுத்தத்தில் என்ன நடக்கும், தமது இரண்டாம் வருகையில் என்ன நடக்கும், ஆயிர வருட அரசாட்சி, இறுதி நியாயத்தீர்ப்பு, என்பவைகளை சொல்லி எப்படி தேவன் தமது பிள்ளைகளுக்கு நித்திய எதிர்காலத்தை திட்டமிட்டிருக்கிறார் என்று கூறுகிறார். இந்த தொடரில் தேவன் எதிர்காலத்தில் சம்பவிக்க போகிறவைகளாக சொல்லியிருக்கிற ஒவ்வொரு நிகழ்வுகளையும் நீங்கள் புரிந்துகொள்வதற்கு எதுவாக

வெளிப்படுத்தின விசேஷத்தை அதிகாரம் அதிகாரமாக பார்க்க இருக்கிறோம்.

இந்த தொடரின் இரண்டாவது பாகத்தின் இன்றைய நிகழ்ச்சியின் தலைப்பு, "நியாயத்தீர்ப்புகளும் உபத்திரவ காலத்தின் முக்கிய பங்காளிகளும், வெளிப்படுத்தல் 7 முதல் 13 வரை.

எனது விருந்தினர்கள்: Dr. எட் ஹின்ட்சன், டீன் லிபர்டி பல்கலைகழகத்தின் ஸ்கூல் ஆப் ரிலிஜியன் மற்றும் மதங்களை பற்றிய பிரிவின் விரிவுரையாளர், நாற்பதிற்கும் மேலான புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

Dr. மார்க் ஹிட்ச்காக் டல்லாஸ் இறையியல் செமினரியில் வேதாகமத்தை விவரித்தல் பிரிவின் துணை பேராசிரியராக இருக்கிறார். இவர் வேதாகம தீர்க்க தரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், இவர் விசுவாச வேதாக திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் ஐவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதனை செய்கிறார், இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் தீர்க்கதரிசனம் என்ற தலைப்பில் 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்த சிறப்பு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கர்பெர்க், நிகழ்ச்சியில் கலந்துகொண்டமைக்கு நன்றி. ஒரு அருமையான தலைப்பை பற்றி தான் பார்த்துகொண்டு இருக்கிறோம் இயேசு சபைக்கு கூறின இறுதியான வார்த்தைகள். அவை யங்கே அமைந்திருக்கிறது? இவை வேதாகமத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தலில் இருக்கிறது. இந்த அருமையான மேதைகளோடு நாம் செய்கிற காரியம் என்னவென்றால் தேவன் எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்கலேன கூறியவைகளை அதிகாரம் அதிகாரமாக பார்க்க இருக்கிறோம், ஆல்ரைட்? சரி, எட், ஒருசிலர் வருத்தத்தோடு இருக்கலாம் அவங்களுக்காக சுருக்கமா சொல்லுங்க, “ஓ, எதிர்பாராத விதமா, முதல் மூன்று நிகழ்ச்சியை தவறவிட்டேன். இப்பதா பார்க்கிறேன். அதனால, இதுவரைக்கும், என்ன நடந்ததுன்னு சொன்னா நானும் அதே நிலைக்கு வந்திடுவேன் என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள்.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..சரி, வெளிப்படுத்தின விசேஷம் முதலாம் அதிகாரம் முன்னுரையோடு துவங்குகிறது. உயிர்த்தெழுந்த இயேசு யோவானுக்கு பத்மூ தீவில் தொன்று இந்த வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை எழுதும்படி கட்டளை கொடுத்தார். அடுத்து 2 மற்றும் 3ம் அதிகாரம் ஆசியாவில் உள்ள ஏழு சபைகளுக்கும் இயேசு சொல்லுகிற காரியங்களை பற்றி பார்க்கிறோம். ஏழு கடிதங்களும் முதல்

நூற்றாண்டில் இருந்த ஏழு சபைகளுக்கு எழுதப்பட்டது, ஆனால் அந்த கடிதங்களில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தும் எப்போதும் எல்லா சபைகளுக்கு ஏற்புடையதாக இருக்கிறது.

அடுத்ததாக நான்காம் மற்றும் ஐந்தாம் அதிகாரத்தில் மிகப்பெரிய பிரச்சனையை பற்றி பார்க்கிறோம். யோவான் பரலோகத்தில் இருக்கும் தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளாக எடுத்துகொள்ளப்படுகிறார், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனை பார்க்கிறார். ஆனாலும் எப்படி ஒருவர் தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசிக்க முடியும் என்று புரியாமல் திகைக்கிறார் புஸ்தகத்தை வாங்க யார் பாத்திரவான், யார் முத்திரையை உடைப்பார், யார் பரலோக ராஜ்யத்தில் இருந்து பூமிக்கு நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்த முடியும் என்றும் நினைத்து பார்க்கிறார். மேலும் திடீரென்று, கண்ணீர் நிறைந்த கண்களால், இயேசுவை பார்க்கிறார். சிங்காசனத்தில் தேவ ஆட்டுக்குட்டியானவர் தோன்றினார், பிதாவாகிய தேவனுக்கு நிகராக இருந்தார். இயேசுதான் இந்த பிரட்சனைக்கு பதிலாக இருக்கிறார். அவர் வந்து புஸ்தகத்தை பெற்றுகொண்டு, முத்திரையை உடைத்தார்.

அவை என்ன என்பதை பற்றியா விபரங்களை ஆறாம் அதிகாரத்தின் துவக்கத்தில் இருந்து பார்த்தோம், அந்த அந்த ஆறு முத்திரைகளை திறந்த போது ஆட்டுக்குட்டியானவரின் கோபாக்கினை இந்த பூமியின் மீது நியாயத்தீர்ப்புகளாக எழும்ப துவங்குவதை பற்றி பார்த்தோம். அந்த அதிகாரங்கள் அனைத்தும் தேவனுடைய கொபாக்கினையோடு

முடிவடைகிறது, இருந்தாலும் உடனடியாக ஏழாம் அதிகாரத்தில் தேவனுடேய இரக்கங்களை பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. உண்மையாகவே இந்த உபத்திர காலத்தின் போது சிலர் இரட்சிப்பை பெற்றுகொள்வார்கள் - லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேர், அதோடு எண்ணிக்கைக்கு அடங்காத புரஜாதியின் கூட்டத்தாரும் எல்லா கோத்திரத்தாரும் எல்லா பாஷைகாரரும் ஜாதிகளும் இருப்பார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மார்க்கிடம் கடந்து போவதற்கு முன்பாக, நாம பார்த்த அந்த முத்திரைகளை பற்றி சுருக்கமாக சொல்லுங்க, சீக்கிரமா.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..சரி, முதல் முத்திரையை அவர் உடைத்த போது குதிரை வீரகளின் துவக்கம் ஆரம்பகிறது, வெளிப்படுத்தின விசேஷத்தின் நான்கு குதிரைவீரர்கள், என்று சொல்லலாம். வெள்ளை குதிரையின் மேல் ஏறியிருந்தவர் இந்த உலகத்தை ஜெயிக்கும்படியாக வருகிறான், இது அந்தி கிறிஸ்துவை குறிக்கிறது, சிவப்பு குதிரை, இரண்டாவதாக, யுத்தம், இந்த உலகமானது யுத்தத்தினால் நிறையப்போகிறது; அடுத்தது கருப்பு குதிரை, மூன்றாவது முத்திரை, பஞ்சம்; அடுத்தது நான்காவது முத்திரை, மங்கின குதிரை மரணத்தை குறிப்பதாக இருக்கிறது. வேறவிதமா சொன்னா, அந்தி கிறிஸ்து வருகிறான், அதோடு யுத்தமும் மரணமும் பஞ்சமும் வரும். அடுத்தது ஐந்தாம் முத்திரை  உபத்திரவ காலத்தில் கிறிஸ்துவுக்காக தங்கள் ஜீவனை கொடுக்கும் இரத்த சாட்சிகளோடு தொடர்புடைய ஒன்றாகும்.

அடுத்தது ஆறாவது முத்திரை அண்ட சராசரத்தையே உலுக்க கூடிய பூமி அதிர்ச்சி உண்டாகும் இதனால் மக்கள் குகைகளிலும் பாறைகளிலும் ஓடி ஒளிந்துகொள்ள இடம் தேடுவார்கள். அவர்கள் இயற்கையை பார்த்து, பாறைகளை பார்த்து, எங்கள் மேல் விழுங்கள் என்பார்கள், ஆனால் தேவனை நோக்கி கூப்பிட மாட்டார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் கவலைக்குரிய பகுதியும் இருக்கிறது அது என்னவென்றால் திரும்ப திரும்ப சொல்லப்படும் காரியம், “அவர்கள் மனந்திரும்பவில்லை, அவர்கள் மனந்திரும்பவில்லை.”தேவனிடத்தில் திரும்புவதை விட மரணத்தை விரும்பினார்கள். இப்ப தனித்து விடப்படும் கேள்வி என்னவென்றால், உபத்திரவ காலத்தில் தேவனிடத்தில் வருகிறவர்களுக்கு ஏதாவது நம்பிக்கை கிடைக்க வாய்ப்புகள் இருக்கிறதா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இங்க லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேரை பற்றி பார்க்க இருக்கிறோம் இவர்களை தேவன் தெரிந்துகொண்டிருக்கிறார். ஆனா, அதாவது, எனக்கு ஞாபகமிருக்கிறது ஒரு பேராசிரியர் ஒரு நாள் முழுதும் என்னோடு உட்கார்ந்து, எட்டு மணிநேரம், உட்கார்ந்து இந்த முத்திரைகளை எனக்கு எடுத்து சொன்னார், அதுவும் வேதத்தின் மற்ற பகுதிகளில் இருந்து. உங்களுக்கும் அதை பற்றி தெரிந்திருக்கும். நாம சொல்ல நினைக்கிற காரியத்தை விளக்கி சொல்லுங்க.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...ஆமா, மத்தேயு இருபத்திநாலு இதுல இறுதியாக சம்பவிக்கும் காரியங்கள் இருக்கு, இது தான் சிலுவையில் மரிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இயேசு ஒலிவ மலையில் கொடுத்த செய்தியாக இருக்கிறது. இயேசு ஒரு தீர்க்கதரிசன முன்னோட்டத்தை கூறியிருக்கிறார் அல்லது இறுதி நாட்களை குறித்த வரைபடத்தை கொடுத்திருக்கிறார் எனலாம். அவருடைய சீஷர்கள் கேட்டார்கள், “இந்த காரியங்கள் எப்போது சம்பவிக்கும், உம்முடைய வருகைக்கான அடையாளங்கள் என்ன, முடிவு எப்போது சம்பவிக்கும்?” இயேசு இவைகளுக்கு பதில் சொல்ல துவங்குகிறார், நீங்கள் கள்ள கிறிஸ்துவையும் பொய்யான மேசியாக்களையும் காண்பீர்கள்.” வெள்ளை குதிரையின் மேல் வருகிற ஒருவன் இருக்கிறான், யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேட்பீர்கள். இது சிவப்பு குதிரையின் மேல் வருகிறவன். பஞ்சமுண்டாக போகிறது. இது மங்கின குதிரையின் மேல் வருகிறவன். இப்படியே, போய்கொண்ட இருக்கிறது. இயேசு உண்மையாகவே மத்தேயு இருபத்தினாங்கில் எல்லாவற்றையும் சுருக்கி சொல்லியிருக்கிறார், ஒரு சுருக்கமான முன்னோட்டமாக இருக்கிறது, இவை வெளிப்படுத்தின விசேஷத்தின் நிகழ்வுகளாக இருக்கிறது. இதன் மூலமாக வெளிப்படுத்தல் ஆறாம் அதிகாரத்தின் நிகழ்வுகள் மற்றும் முத்திரை நியாயத்தீர்ப்புகள்  இயேசு மத்தேயு இருபத்தி நான்கில் சொல்லிய காரியங்களுடன்

இணையக்கூடியதாக இருக்கிறது என்பதை தெளிவாக நம்மால் பார்க்க முடிகிறது.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அது நேர்த்தியாகவும் இருந்தது. ஆச்சரியமாக இருக்கிறது, ரான், இதை தொடர்ந்து பார்க்கலாம். பூமி முழுவதும் ஒரு பெரிய கலக்கம் உண்டாகும். நீங்க சொல்லுங்க, மார்க், இந்த காலத்தில் சுமார் எத்தனை பேர் மரிப்பார்கள்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...சரி, நான்காம் முத்திரை நியாயத்தீர்ப்பில் பூமியின் நான்காவது பங்காக இருக்கிறது.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** ஒகே. அங்கும் இங்குமாக ஜனங்கள் மரித்து கிடப்பார்கள் என்றிருக்கிறது; அதோட பஞ்சம் இருக்கிறது, ஜனங்களுக்கு தீமையை வருவிக்கும் விதமாக ஆளுகிறவர்கள் இருப்பாங்க, சரியா? இது எல்லாத்துக்கும் மத்தியில் தேவ இரக்கமும் இருக்கும், ஏன்னா அவர் லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம்பேரை, தெரிந்துகொண்டு அவரை பற்றி சாட்சிகொடுக்க செய்கிறார். இதை பற்றி அவர் நிறைய விஷயங்களை சொல்லியிருக்கிறார். இந்த லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேர் யார், அவர்களுக்கு தேவ வல்லமை கொடுக்கப்பட்டதை பற்றி விளக்கி சொல்லுங்க.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, இது ரொம்ப சுவாரஸ்யமானது, ஏன்னா மனித வரலாற்றில் இந்த இருண்ட காலத்தில், தேவனுடைய ஒளிஇன்னும் பிரகாசிக்கிறது. தேவனுடைய கோபாக்கினை

மனுகுலத்தின் மீது இறங்கினாலும், அவருடைய இரக்கமும் கிருபையும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. ஏன்? யாரும் அழிந்துபோவது அவருடைய விருப்பம் இல்லை. ஆனா தேவனுடைய விரோதமாக எதிர்க்க நிற்க தீர்மானிக்கும்போது, இறுதியாக, த்வனுடைய கோபாக்கினையை தான் பெற்றுக்கொள்ள நேரிடும். அதுதான் இங்கு நடந்துகொண்டு இருக்கிறது. இந்த லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேரை பற்றி இரண்டு கண்ணோட்டங்கள் இருக்கிறது. ஒன்று இதை சபையை குறிப்பதாக இருக்கிறது என்பதாகும். இதுல பிரச்சனை என்னன்னா, இவன் யூத ஜனங்களாகிய லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேர், 120000 பேர் ஒவ்வொரு கோத்திரத்திலும். வேதாகமத்தில் சபை என்பது சபைதான், இஸ்ரவேல் என்பது இஸ்ரவேல் தான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இங்க எல்லா கோத்திரங்களும் பட்டியலிடப்பட்டு இருக்கு.,

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...அதுதான் ஒவ்வொன்றா வருகிறது. குறிப்பிட்ட கோத்திரங்களும் குறிப்பிட்ட எண்களும் சொல்லப்பட்டு இருக்கிறது. வேதத்தின் வேரும் எந்த இடத்திலும் இவ்வளவு குறிப்பாக என்களோ கோத்திரங்களோ குறிப்பிடப்பட்டதை பார்க்க முடியாது. அதாவது, இஸ்ரவேல் கோத்திரத்தை தவற வேறொன்றையும் பார்க்க முடியாது. அதனால இதெல்லாம் கோத்திரங்கள் தான் என்று தெளிவாக புரிகியது. அப்போஸ்தலர் நடபடிகளில் கூட சபை இஸ்ரவேல் என்று

தனித்தனியாக சொல்லப்பட்டு இருப்பதை பார்க்க முடியும், அதாவது, இஸ்ரவேல் என்பது சுமார் 20 முறையும் சபை என்று சுமார் 19 முறையும் சொல்லப்பட்டு இருக்கிறது.அப்போஸ்தலனாகிய பவுலும் கூட தனது நிருபங்களில் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை தொடர்ந்து சொல்லி கொண்டே இருக்கிறார். இதுல முக்கியமானது இதுதான், அடிப்படை பின்னணி என்று சொன்னால், தேவன் யூத மக்களை தேசத்தை, இஸ்ரவேலர்களை, புறஜாதிகளுக்கு ஒளியாக இருக்கும்படி அழைத்திருக்கிறார்.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** உலகம் முழுவதற்கும், உலகத்தின் தேசமனைத்திற்கும்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...உலகம் முழுவதற்கும் தான். அவர்கள் நற்செய்தியை எங்கும் சுமந்து செல்ல வேண்டும் என்று நினைத்தார், உலகம் முழுவதும், உலகளாவிய அளவு. ஆனா உண்மை என்னன்னா, அவங்க அதை செய்ய தவறிவிட்டனர். இயேசுவை அவர்கள் தெய்வீகமானவர் மேசியா என்பதை அறிந்துகொள்ள தவறிவிட்டனர். சுருக்கமாக சொன்னால், இந்த லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேர் இஸ்ரவேலர்களுக்கு அடிப்படியாக கொடுக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றுகிறவர்களாக இருப்பார்கள் என நினைக்கிறேன். உலகம் எங்கும் சென்று ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் சுவிசேஷகர்களாக இருப்பார்கள். இதினிமித்தமாக எண்ணிக்கைக்கு அடங்காத நிறைய பேர் மனமாறுவார்கள் என நான்

நம்புகிறேன். அதற்கு பிறகு பார்க்கும்போது திரளான கூட்டம் இருப்பதை பற்றி பார்க்கிறோம். ஆனா, நாம பார்க்கும், இந்த திரளான கூட்டம், என்னுடைய கருத்துப்படி, லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேரின் மூலம் மட்டுமல்ல, வல்லமையான அந்த தீர்க்கதரிசிகலான இரண்டு சாட்சிகளினால் உண்டானவர்களாக இருப்பார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, மார்க், தேவன் எப்படி இந்த நபர்களுக்கு தோன்றினார் என்று நினைக்கிறீர்கள், அவர்களுக்கு இந்த வேலையை எப்படி கொடுத்தார், அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று எப்படி அவர்களுக்கு சொன்னார்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...இது, மிகப்பெரிய கேள்வியாக இருக்கிறது. இந்த கட்டத்தில் சபை எடுத்துகொள்ளப்பட்டு இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இவை பரலோகத்திற்கு எடுத்து கொல்லப்பட்டு விட்டது. எனவே இப்ப பூமியில் விடப்பட்டு இருக்கும் ஜனங்கள் தான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்தை பெறுகிறார்கள். எப்படி இந்த விசுவாசத்தை பெருகிறார்கள் என்று நமக்கு தெரியாது. அவர்கள் பார்க்கிற படிக்கிற காரியங்கள் மூலம் தாங்கள் இங்கு கைவிடப்பட்டு இருப்பதை அவர்கள் புரிந்துகொள்ளுகிறவர்களாக இருக்கலாம். அல்லது இவர்கள் எல்லாம், ஒரு இடத்தில் சொல்லப்பட்டு இருக்கிறபடி, அதாவது, தர்சுவை சேர்ந்த லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் சவுலாக இருக்கலாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை பெற்று இயேசு கிறிஸ்துவை

விசுவாசிக்கும் நிலையை பெற்றிருக்கலாம். ஆனால் தேவன் 12 கோத்திரங்களில் ஒவ்வொன்றில் இருந்தும் 12000 பேரை தெரிந்துகொண்டு தமக்கு சாட்சியாக நடக்க செய்திடுவார். இங்க, தேவன் இந்த லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேரை காத்து, இந்த காலம் முழுவதும் அவர்களை பாதுகாத்து வைத்திடுவார். வெளிப்படுத்தல் பதினாலு முடிவு பெறும்போது இங்க இன்னும் லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேர் இருப்பதை பார்க்க முடியும். அது லட்சத்தி நாற்பத்தி மூவாயிரத்து முன்னூற்றி தொளாயிரத்து தொன்னூத்தி ஒன்பது இல்ல. இந்த காலம் முழுவதும் அவர்களை பராமரித்து காப்பதாக சொன்ன வாக்குதத்தை நிறைவேற்றிட உண்மையுள்ள தேவனாக இருக்கிறார்.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இப்போது ஒரு சிறிய இடைவேளை எடுத்துகொள்வோம், நாம திரும்ப வந்ததும் ஏழாவது முத்திரை எப்படி ஏழு எக்காள நியாயத்தீர்ப்பிற்கு வழிவகுக்கிறது என்றும் அந்த நியாயத்தீர்ப்பு எப்படி வருகிறது என்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள், மீண்டும் சந்திப்போம்.

*****

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம வெளிப்படுத்தின விசேஷத்தை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம் எதிர்காலத்தில் உண்மையாக சம்பவிக்க போகிற சில முக்கிய

நிகழ்வுகளை தேவன் நமக்கு அதில் வெளிப்படுத்துகிறார். நம் மத்தியில் நம்மோடு இருப்பவர்கள் Dr. எட் ஹின்ட்சன் மற்றும் Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோட்ஸ். இப்ப, எட், எட்டாம் அதிகாரத்தில் இருக்கிற மிகபெரிய காரியத்தை நமக்கு எடுத்து கூறியிருக்கிறார், இங்க இப்ப எக்காள நியாய்த்தீர்ப்பிற்கு நேராக வருகிறோம். இது இன்னொரு காட்சியை வெளிப்படுத்துகிறது.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்று விதமான ஏழு நியாயத்தீர்ப்புகள் இருக்கிறது: ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், இறுதியா இருப்பது ஏழு கலச நியாயத்தீர்ப்பு. ஏழாவது முத்திரையை உடைக்கும்போது இந்த ஏழு எக்காள நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது. இது தூதர்களின் நியாயத்தீர்ப்பு போல இருக்கிறது ஒவ்வொரு தூதனாக வந்து ஒரு அணிவகுப்பு போல வந்து இங்க, நியாயத்தீர்ப்பின் எக்காளங்களை முழங்குகிறார்கள், அப்ப பூமியின் மீது நாசம் ஏற்படுகிறது. இப்ப எட்டாம் அதிகாரத்தில் இருந்து பதினோராம் அதிகாரம் வரைக்கும் பார்க்கும்போது இந்த ஏழு எக்காள நியாயத்தீர்ப்பை குறித்தை விவரத்தை பார்க்கலாம். இங்கயும் தேவன் கொடுக்கும் நம்பிக்கையின் செய்தி இணைக்கப்பட்டு இருக்க பார்க்கிறோம். இந்த ஒவ்வொரு நியாய்த்தீர்ப்பும் முழு பூமியையும் பாதிக்கிறது: விளைச்சல், கடல், ஆறுகள், காற்று. இங்க வெட்டுக்கிளிகளின் வாதை வருகிறது. ஐபிராத்து நதி கிழக்கில் இருந்து வரும் யுத்தத்திற்கு வழி திறந்து கொடுப்பதாக இருக்கிறது. இறுதியாக

கடுமையான தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிபடுவதாக இருக்கிறது. இந்த அண்டசராசரத்தில் மூன்றில் ஒரு பங்கு மிகவும் பாதிக்கப்படும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இங்க ஒரு நிமிடம் நின்று இன்னொரு கேள்வியை பார்க்கலாம். ஒரு ஆச்சரியமான விஷயத்தை உங்களுக்கு சொல்லட்டுமா. அது யெனனாஉ கேட்டீங்கன்னா, அது மிகப்பெரிய விஷயமா இருக்கு, ஜனங்க கேட்க்கிறாங்க, "ஏன் தேவன் இந்த காலத்தில் ரொம்ப கடுமையாக நடந்துகொள்கிறார்?"

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**...ஆமா, ஏன்னா தேவன் ஜனங்கள் மனந்திரும்புவதற்கு பல நூற்றாண்டுகள் சந்தர்பத்தை கொடுத்து அவரை விசுவாசிக்கவும் அவருக்கு தங்களை அர்ப்பணிக்கவும் சொன்னார். இத்தனை நூற்றாண்டுகளாக மன கடினம், இருதயகடினம், முரட்டாம்தான் மிச்சம். மனிதனுடைய இருதயம் அதிக கடினமானதாக மாறிவிட்டது மாறிக்கொண்டே போனது. இப்ப இறுதியாக தேவன் முடிவு செய்கிற காரியம் இதுதான், "என்னுடைய பாதுகாப்பின் கரத்தை விளக்குகிறேன், மனிதனுடைய இருதய கடினமானது ஜனங்களை அழிவிற்கு நேராக நடத்தி செல்வதாக இருக்கும் என்கிறார். நான் உங்களை பாதுகாப்பது இல்லை என்கிறார்." அதாவது, ஆச்சரியாமா இருக்கு, ஜான். நம்முடைய வாழ்க்கைக்கு தேவன் வேண்டாம் என்கிறோம், தேவன் இடைபடுவதில் ஜனங்களுக்கு விருப்பமில்லாமல் எதிர்க்கிறார்கள், இது அது என்கிறார்கள் - அப்பத்தா ஏதோவொரு தவறு சம்பவிக்கிறது. அது பிறகு பாட ஆரம்பிப்பாங்க, "அமெரிக்காவை

ஆசீர்வதியும் தேவா” என்று சொல்வார்கள், இவர்களை காக்கும்படி தேவனிடத்தில் வேண்டுதல் செய்யணுன்னு சொல்வாங்க. நான் நினைக்கிறேன் நிச்சயமா ஒரு நேரம் வரும் அப்ப தேவன் சொல்வாரு, “நான் ஏன் செய்யணும்? என்னை இதுவரைக்கும் பொருட்டாக நினைகல, ஏற்கனவே மெய்யான விசுவாசிகளை நான் வேறு பிரித்து எடுத்துக்கொண்டேன், அதனால, நிச்சயமா இந்த பூமியின் மீது நரகத்தின் ஆளுகை கட்டவிழ்க்க பட போகிறது.”

Dr. **ஜான் அன்கெர்பெர்க்**: சரி, ரான் முதல் எக்காள நியாயத்தீர்ப்பில் இருந்து துவங்கிடலாம். இங்க என்ன நடக்கிறது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்**:...சரி, பரந்த கண்ணோட்டத்தில் பார்க்கணும், முதல் நான்கு எக்காள நியாயத்தீர்ப்பும் உலகத்திற்கு விரோதமாக வருகிறது, மனிதனுடைய சூழ்நிலை; கடைசி மூன்றும் மனுகுலத்தை குறிவைக்கிறது. முதலாம் எக்காளத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்கும்போது அங்கு அக்கினியும் நெருப்பும், இரத்த கலவைகள், என்று பூமியின் மீது வீசப்படும் காரியங்கள் இருக்கு. இப்ப, அதனுடைய வெளிப்பாடுகள் எல்லாம் கொஞ்சம் நுணுக்கமாக தோன்றுகிறது. அதாவது மரங்களில் மூன்றில் ஒரு பங்கு எரிந்து விடும் பச்சை புல்களில் ஒரு பங்கு எரிந்துவிடும். மனிதனுடைய சுற்றுசூழல் மிகவும் பாதிப்படைகிறது. இது அடுத்த வரிசையாக வர இருக்கும் எக்காள நியாயத்தீர்ப்புகளோடு சேர மிகப்பெரிய பாதிப்பு உண்டாகிறது, மிகப்பெரிய நாசம் ஏற்படுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இரண்டாவது எக்காளம்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...ஆமா, ரான் சொன்னது போல இது, சுவாரஸ்யமாக இருக்கு. முத்திரைகள், முதல் நான்கு இருக்கிறது அது நான்கு குதிரை வீரகள், அடுத்த இராண்டாவது மூன்று. இங்கயும் அதே மாதிரிதான் இருக்கு. முதல் நான்கு, அடுத்த இறுதி மூன்றும் ஐயோ என்று சொல்லபடுகிறது. இதுவும் அதே மாதிதான் பிரிக்கப்பட்டு இருக்கிறது. அப்ப, இது ஒவ்வொன்றும், இரண்டாவது எக்காலம் போல, வானத்தில் இருந்து தீ பந்து வரும். சமுத்திரத்தின் மூன்றில் ஒரு பங்கு நாசமடையும். இரண்டாவது தூதனின் தோனி என்று சொல்லப்படுகிறது. ஒரு பெரிய பர்வதம் போன்ற தீ கடலில் தள்ளப்படுவது போல இருக்கும். சமுத்திரத்தின் மூன்றில் ஒருபங்கு இரத்தமாகும் சமுத்திரத்தின் ஜீவ ராசிகளில் மூன்றில் ஒருபங்கு மரித்துவிடும், மூன்றில் ஒருபங்கு கப்பல்கள் நாசமடையும். இதுல சமுத்திரத்தின் ஒரு பங்கானது நாசமடைந்த குட்டையை போல இருக்கும் முழுவதும் இரத்தமாக மாறியிருக்கும். இதுல கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்த சம்பவங்கள் எல்லாவற்றிலும் மூன்றில் ஒரு  பங்கு, மூன்றில், ஒருபங்கு என மறுபடிமறுபடி வருகிறது. இங்க ஏன் குறிப்பாக இந்த மூன்றில் ஒன்று என வருகிறதென்று தெரியல. அதாவது, இதை பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகிறது. இதுல ஒரு விஷயம் புரியுது இது தேவனிடத்தில் இருந்து வருகிறது, சர்வத்துவம் வாய்ந்தவர்.

வேறுவிதமா சொன்னா, ஏனோதானோவென்று நடக்கல. இல்லவே இல்ல, அதாவது, முழு பூமியும், இதில் பங்கு பெருகிறது. எகிப்தியர்களின் வாதை குறிப்பிட்ட பகுதியை தாக்கினது போல தான். என்ன நடக்கிறதோ அது தேவனுடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மூன்றாவது எக்காளம்?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..மூன்றாவது நதிகளை பாதிக்கிறது, தண்ணீர்களை பாதிக்கிறது. அதாவது இரண்டாவது எக்காலத்தில் சமுத்திரம் மாசடைகிறது, மூன்றாவது எக்காலத்தில், நல்ல தண்ணீர் பாதிப்பை அடிகிறது. அடுத்து நான்காவது எக்காலத்தில், காற்று மாசடைய போகிறது, ஏன்னா நீங்க சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் பார்க்க மாட்டீங்க இது நாளின் மூன்றில் ஒரு பங்கு. அது அங்கயே தான் இருக்கும், ஆனா உங்களால அதை பார்க்க முடியாது. இப்ப, வேதம் இந்த நியூக்கிளர் யுத்தத்தை பற்றி நேரடியாக சொல்லவில்லை. ஆதி காலத்தில் அது என்னவென்று யாருக்கும் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இது அது போலதான் தோன்றுகிறது. பூமியின் மூன்றில் ஒரு பங்கை பாதிக்க கூடியதான ஏதோவொரு கடுமையான காரியம் நடக்கும். இது விளைச்சல்களை பாதிக்கும், காற்று தண்ணீரை மாசுப்படுத்தும். உலகின் மூன்றில் ஒருபங்கை பயன்படுத்த முடியாத அளவிற்கு செய்யப்போகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. அடுத்ததாக, ரான், சுவாரஸ்யம் நிறைந்த இந்த ஐந்தாவது எக்காலத்திற்கு வரும்போது, அங்கு நடக்கும் காரியங்கள் என்ன?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, இதுவரைக்கும் இல்லாத மோசமான நியாயத்தீர்ப்பாக இது இருக்கபோகிறது. இந்த நியாயத்தீர்ப்பில் தான் வெட்டுக்கிளிகள் வருகிறது, இது உண்மையில் அசுத்த ஆவிகள், இவை பாதாளத்தில் இருந்து அவிழ்த்து விடப்படுகிரவை. சரி, நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும் பாதாள குழியில் அடைக்கபட்டிருக்கும் அசுத்த ஆவிகள் தான் இருப்பதிலேயே மிகவும் மோசமானவை. இன்னும் அவை கட்டவிழ்க்கப்பட இறக்கிறது. அது வெட்டுக்கிளிகளின் புயல் போல இருக்கும் அவ்வளவு அதிகமாக இருக்கும். அந்த வாசலில் இருந்து அசுத்த ஆவிகள் மேகம் போல புறப்பட்டு வரும். ஐந்து மாத காலத்திற்கு மனிதர்களை வாதிக்கும் உரிமை அவைகளுக்கு அளிக்கப்படும், ஆனால் கொலை செய்ய உரிமையில்லை. ஜனங்க மரிக்க விரும்புவாங்க, ஆனா சாக முடியாது. வருத்தத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற நிலை. இப்ப, மனிதனுடைய சுற்றுசூழல் மிகவும் பாதிக்கபடுவதை பற்றி நாம் பார்த்தோம், இப்ப அதிகப்படியான வேதனையும் கூடிக்கொள்கிறது. சரி, அதுமட்டுமல்ல, தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள் இதற்கு விலக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பூமியின் மீது பல ஆண்டுகளாக தேவனுக்கு விரோதமாக அவருக்கு எதிர்த்து நின்றவர்கள் எல்லாரும் நிச்சயமாக

அதனுடைய விளைவை தாக்கத்தை அனுபவிக்கும் நாட்கள் வரப்போகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இங்க அவிழ்த்து விடபடுகிற நிறைய விஷயங்கள் இருக்கிறது. அதை பற்றி சொல்ல விரும்புறீங்களா?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...ஆமா. நிச்சயமா. அதாவது, இது கொடுமையான நியாயத்தீர்ப்பு. அதாவது, உலகமானது இந்த காலகட்டில் நிச்சயமா பெரிய சிக்கலை சந்திக்க போகிறது. வானத்தில் இருந்து தேவ கோபாக்கினை வருகிறது; பூமியின் மீது மனிதனுடைய கோபாக்கினை உண்டாகும்; இப்ப பூமியின் கீழிருந்து சாத்தானுடைய கோபாக்கினையும் உண்டாகிறது. இதுவந்து பூமியின் மீது நடுநிலை அற்ற நியாயத்தீர்ப்பு உண்டாவதை குறிப்பதாக இருக்க்ரியது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், ஆறாவது எக்காள நியாயத்தீர்ப்பை பற்றி சொல்லுங்க. நீங்க சொலுங்க, எட்.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..இதுல ஒரு சேனையை போல  ஒரு கூட்டம் வரும் 200 மில்லியன் மக்கள், பத்தாயிரம் மடங்கு பத்தாயிரமாக. அந்த நாட்களில் இந்த எண் தான் அதிகப்படியாக அறியப்பட்டது - இவர்கள் கிழக்கில் இருந்து ஐப்பிராத்து வழியாக வந்து மத்திய கிழக்கு பகுதியில்  சேர்ந்து, எருசலேமிற்கும் இஸ்ரேலுக்கு எதிராக வருவார்கள். எனக்கு இதுல புரிந்து விஷயம் இதுதான், எந்த கண்ணோட்டத்தை வைத்து பார்த்தாலும் சரி, புவியியல் ரீதியாக

வெளிப்படுத்தின விசேஷம் மையமாக காட்டுவது மத்திய கிழக்கு பகுதியைத்தான். இந்த யுத்தங்கள் எல்லாம் அங்க தான் நடக்க போகிறது. அந்த சேனை யாரென்று மக்கள் விவாதிப்பார்கள். இப்ப நமக்கு பிடைக்கதவர்கள் நம் எதிரிகள் அந்த சேனையாக எழும்பி வருவார்கள் என்று நினைக்க கூடும். ஆனா ஒன்னு மட்டும் புரியும் அவை அசுத்த ஆவிகளின் ஆதிக்கத்தில் இருக்கும் சேனை. வேறுவிதமாக சொன்னா, ஜனங்கள் முன்னோக்கி வருவாங்க, சேனைகள் சண்டையிடும்; இந்த வெட்டுக்கிளிகள் என்பது நவீன நாட்களின் ஆயுதங்களையும் அணுகுண்டு வண்டிகளையும் குறிக்கிறது. இங்க தான் வருணிக்க முடியாத விஷயத்தை யோவான் வர்ணித்து கூற முயலுகிறார். அவர் சொல்கிறார் மனிதனை போன்று முகமும் பெண்ணை போன்ற நீண்ட கூந்தளை உடையது இறுதியில் அக்கினியை வீசுகிறது என்கிறார். அந்த மாதிரியான ஒன்றை அவருடைய வாழ்நாளில் முன்பு பார்த்திருக்க மாட்டார் என நினைக்கிறேன். அவர் என்ன சொல்கிறார் என்பது அவருக்கே புரியாத ஒன்றாக இருந்திருக்கும். தன்னால இயன்றதை அவர் அங்கு செய்திருக்கிறார். ஆனா இதுக்கு பின்னால சாத்தான் தான் இருக்கான்னு அவருக்கு நல்லா தெரியும். இது சாத்தானின் தந்திரம், மனிதர்களையும் ஆயுதங்களையும் பயன்படுத்தி, அந்த நாட்களில் உலகத்தை அவன் தாக்க போகிறான்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...இதுல கொடுமையான விஷயம் என்னன்னா அவசர சிகிச்சை பிரிவின் எண்ணிக்கை, பூமியின் மூன்றில் ஒரு பங்கு மரித்துவிடுவார்கள். இதை முந்தைய மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிட்டால், பூமியின் நான்கில் ஒரு மடங்குகுக்கு சரியாக இருக்கும், பாதி வரைக்கும்...

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, உலகத்தின் பாதி வரை முடிஞ்சிருச்சு. மார்க், இது இறையியலில் மிகப்பெரிய கேள்வியை எழுப்புகிறது, அதாவது, இந்த எக்காளங்கள் எல்லாம், முடியப்போகிற நேரமாக இருக்கும்போது, நாம உபத்திரவ காலத்தின் பாதியை கடந்து முடித்திருக்க ஏதாவது வாய்ப்புகள் இருக்கிறதா? இது எந்த பகுதியில் நடக்க இருக்கிறது? உபத்திரவ காலம், முதல் பாதி மூன்றரை வருடம், இரண்டாவது பகுதி மூன்றரை வருடம், மொத்தம் ஏழு வருடங்கள். இந்த எக்காளங்கள் எந்த கட்டத்தில் இருக்கும்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...சரி, இது ரொம்ப முக்கியமாக கேள்வி என்று நினைக்கிறேன், ஏன்னா ஜனங்கள் ஒத்துகொள்ளாமல் இருக்கும் காரியங்களில் இது முதன்மையானதாக இருக்கிறது, நிச்சயமா, வெளிப்படுத்தின விசேஷத்தின் வரிசையோடு அவர்களுக்கு உடன்பாடில்லை. இதுல என்ன சொல்வது என்று உண்மையா நமக்கும் தெரியல. எல்லாம் தெரிந்தவர்களே இதை ஏற்க மறுக்கிறார்கள். என்னுடைய கண்ணோட்டத்தை எதிர்க்கும் வேதாக தீர்க்க தரிசன ஆசிரியர்களான என்னுடைய நண்பர்களே இருக்காங்க. அதனால, இந்த

காரியத்துல நம்ம எப்படி கருத்தை எடுத்துகொள்கிறோம் என்பதில் கவனமாக இருக்கவேண்டும். முத்திரை நியாயத்தீர்ப்பை உபத்திரவ காலத்தின் முதல் பாதியாக பார்க்கிறேன். இதெல்லாம் பிரசவ வழியை போல ஒரு ஆரம்பமாக இருக்கிறது. அடுத்ததாக எக்காள நியாயத்தீர்ப்பை உபத்திரவ காலத்தின் இரண்டாவது பகுதியில் வைக்கிறேன். அடுத்தது இறுதியாக கலச நியாயத்தீர்ப்புகளை வைக்கிறேன், இது துரிதமாக நடந்து முடிகிற ஒன்றாக இருக்கும், ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும், அதாவது, இந்த நியாயத்தீர்ப்புகள், இவை உபத்திரவ காலத்தின் முதல் பாதியில் நடந்தாலும் - முத்திரைகளின் - பாதிப்புகள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். எக்காள நியாயத்தீர்ப்பை நான் இரண்டாவது இடத்தில் வைக்கிறேன், இதற்கு வலுவான ஒரு காரணம் இருக்கு; இதனுடைய ஆற்றல் அதிகமாயிருக்கும். ஏன்னா இயேசு சொல்லுகிறார் உபத்திரவ காலத்தின் இரண்டாவது பகுதியானது, இது மகா உபத்திரவ காலம் எனப்படும், இது இதுவரைக்கு பூமி பார்த்திராத விதமாக இருக்கும் என்கிறார். சரி, எக்காள நியாயத்தீர்ப்பை உபத்திரவ காலத்தின் முத்திரைகளோடு வைத்தால், முதல் பாதி உபத்திரவ காலத்தில் பாதி ஜனங்கள் மரித்து போகிற நிலை உண்டாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** முழு உலகத்தில் இருக்கிற பாதி ஜனங்கள்

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்**:...முழ உலகத்திலும் பாதிக்கு பாதி முடிஞ்சுடும். இது உபத்திரவ காலத்தின் இரண்டாவது பகுதியை விட மோசமான ஒன்றாக இருக்கும்.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்**: சரி.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்**:...இவைகளை இரண்டாவது பகுதியில் வைக்க காரணமான இன்னொரு வரிசை பட்டியல் கூட என்னிடம் இருக்கிறது. அதுதான் இந்த புத்தகத்தின் வரிசைப்படி சீர இருக்கும் என்று நினைக்கிறேன். முதல்ல முத்திரை நியாயத்தீர்ப்பு; இவை மத்தேயு இருபத்தி நான்கில் இயேசு சொன்னவற்றோடு ஒத்துபோக ஒரு துவக்கமாக காணப்படுகிறது. அடுத்து எக்காளங்களோடு மிக கடுமையான காலத்திற்குள் கடந்து வருகிறோம். அதற்கு பிறகு மறுபடியும், கலச நியாயத்தீர்ப்பு இதை பதினாறாம் அதிகாரத்தில் பார்க்கிறோம் இது முடிவில் சம்பவிப்பவைகளாக இருக்கிறது. என்னை பொறுத்தவரை இதுதான் மற்ற வசனங்களோடும் இயேசு சொன்ன காரியங்களோடும் சரியாக ஒத்துபோகிற ஒன்றாக இருக்கிறது.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்**: சரி. எட், சொல்லுங்க, இதை வாசிக்கும்போது ஜனங்கள் இந்த நியாய்தீர்ப்புகள் மிக கொடுமையாக இருக்கிறது நிஜமா நடக்கும் என்று நினைக்கலாம். ஆனா இயேசு கிறிஸ்துதான் இந்த தகவல்களை கொடுக்கிறார், அப்ப அவருடைய அதிகாரம் சாத்தியமுள்ளது என்று நீங்கள் ஒப்புகொண்டால் அதற்கேற்றவாறு

நடக்க வேண்டும். இது கடுமையாக தான் இருக்கபோகிறது, சரியா? இதுவரைக்கும் இப்படி சம்பவிக்கவில்லை, இதுவரைக்கும் எடுத்துக்கொள்ளப்படுதல் சம்பவிக்கவில்லை. இதுவரைக்கும் இயேசுவை ஏற்றுகொள்ளாத நபர்களுக்கு புரியும்படியாக எடுத்து சொல்லுங்கள். அவரை பற்றி அவர்களுக்கு தெரியும், அவ்வளவுதான்; அதை மீறி அவரை பற்றி அவர்கள் யோசிப்பது இல்லை.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..இது நடக்க போகிறது என்று இயேசு சொல்லியிருந்தால், அதை குறித்து வைத்துகொள்ளலாம், அது நிச்சயம் நடக்கும். இயேசு தம்முடைய நாட்களில் இருந்த தேவாலயம் இடிக்கப்படும் என்றார், அப்படியே ஆனது. எதிர்காலத்தில் சம்பவிக்கபோகிற காரியங்களை அவர் ஜனங்களுக்கு வெளிபடுத்தி சொன்னார், அப்படியே ஆனது. ஏன்னா அவர் மாம்சத்தில் வந்து தேவனாக இருக்கிறார், ஆரம்பத்தில் இருந்தே முடிவை பார்க்கிறார். அப்படின்னா ஆரம்பத்தில் இருந்தே அவர் உங்களுடைய என்னுடைய முடிவை அறிந்து இருக்கிறார். வேறுவிதமாக சொன்னால், உங்களுடைய வாழ்க்கையின் முடிவும் உங்களுக்கு இருதயத்தையும் அவர் நன்கு அறிந்தவராக இருக்கிறார்.

நீங்க ஒருவேளை வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்கும்போது இந்த இடத்திற்கு வந்திடலாம் அப்போது, இந்த நியாயத்தீர்ப்புகளின் தீவிரத்தை பார்த்து, அப்பா, கொடுமையானது. நா இங்க தனித்து விடப்படுவதை விரும்பல ஏன்னா யாரும் ஜீவனோடு இருப்பது

சாத்தியமில்லை என்றிடலாம்.” இந்த கலச நியாய்த்தீர்ப்பிற்கு வரும்போது, அது முழு பூமியையும் பாதிப்பதாக இருக்கும்,. வேறுவிதமா சொன்னா, தப்பிக்க வழியே இல்லை. நீங்க ஓடலாம், ஆனா அந்த நேரத்தில் ஒளித்து கொள்ள இடமே இருக்காது.

வெளிப்படுத்தின விசேஷம் முழுவது நமக்கு என்ன சொல்ல வருகிறது என்றால், இது உங்களுக்கு சம்பவிக்க வேண்டிய அவசியமில்லை. இது உங்களை பயமுறுத்துவதற்காக எழுதப்படவில்லை, உங்களை ஆயத்தப்படுத்த எழுதப்பட்டு இருக்கிறது. நம்பிக்கை இருக்கும் போதே இயேசுவிடம் வந்திடுங்க, காலத்தை பிரயோஜனப்படுத்துங்க, எடுத்துகொள்ளபடுதல் சம்பவிக்கும் முன் அல்லது நீங்க நித்தியத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் தீர்மானியுங்கள்.”

உங்களுடைய நித்தியத்தின் இடத்தை தெரிந்துகொள்ள மாற்றிக்கொள்ள உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது, உங்களுக்காக நிவாரண பலியாக மரித்த இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்திடுங்கள். அவர் சிலுவையில் மரித்த போது குற்றவாளியாக இரத்த சாட்சியாக மரிக்கவில்லை. உங்களுக்கு பதிலாக மரித்தார், வெளிப்படுத்தின விசேஷம் சொல்கிறது போல தேவ ஆட்டுக்குட்டியாக மரித்தார். உங்க ஸ்தானத்தில் மரித்தார். உங்களுக்காக மரித்தார். நீங்கள் அவரை நம்பும்படி கேட்கிறார். உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவும் நித்தியஜீவன் என்னும் ஈவையும் பெற்றுக்கொள்ள இதுவே போதுமானதாக இருக்கிறது. அவரிடத்தில் கேட்கவும் உங்களுடைய

விசுவாசத்தை அவர் மீது வைத்து அர்ப்பணிக்கும் ஒரு அனுபவமும் நேரமும் வர வேண்டும்.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** நேயர்களே, இப்போது எட் சொன்னதை கேட்டிரீர்கள் இல்லையா, தேவனுக்கு கீழ்படிய உங்கள் இருதயத்தில் உந்தப்படுவீர்களானால் அதை இப்போதே செய்ய முன்வந்திடுங்கள். தேவன் உங்களுக்கு செவிகொடுப்பார். அவர் உங்களை தமது பக்கமாக இழுக்கிறார். நீங்கள் ஜெபிக்கும்படி விரும்புகிறார், ஆனால் நீங்களே தீர்மானிக்க விட்டுவிடுகிறார். இதுவரை ஜெபிக்காமல் இருந்திருந்தால் இப்போதே ஜெபிப்பீர்கள் என நம்புகிறேன்.

அடுத்த வாரம் வெளிப்படுத்தின விசேஷத்தின் நிகழ்வுகளை குறித்த தலைப்புகளை  பற்றி பார்க்க இருக்கிறோம். தேவன் இந்த பூமியில் நிறுத்த போகிற இரண்டு அருமையான சாட்சிகள் எழும்ப இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்ய போகிறார்கள், அதற்கு உலகத்தின் பிரதியுத்திரம் எப்படி இருக்க போகிறது, அதை நீங்கள் நிச்சயம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். அடுத்த வாரம் தவறாமல் நிகழ்ச்சியை பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.